சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **100/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | மாதவன் |
| தந்தை பெயர் | : | நாயகம் |
| கிராமம் | : | அஹரத்திருநல்லூர், |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | எலக்ட்ரிசியன் |
| வயது | : | 38 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7, 10 எதிரிகள் ஆஜர். 8 மற்றும் 9 எதிரிகள் PT Warrant மூலம் ஆஜர் படுத்துப்பட்டுள்ளார்கள். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அஹரதிருநல்லூரை சேர்ந்த செல்வமணி மகன் குமரேசன் என்பவரை எனக்கு

தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் 4 ம் எதிரி பிரேம்குமாரும், 5 ம் எதிரி கலைசெல்வன் என்பவரும், 6 ம் எதிரி சுரேஷ் என்பவரும், 7 ம் எதிரி கோபாலகிருஷ்ணன் என்பவரும், காவல் துறையினரிடம் அளித்ததாக சொல்லக்கூடிய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் எதுவும் என்னுடைய கையொப்பங்கள் அல்ல. மேலும் சான்று பொருட்களான 1) 69 செ.மீ நீளமுள்ள இரும்பால் ஆன வாள் ஒன்று 2) ஹோன்டா டியோ TN50AD8321 என்ற இரு சக்கர வாகனம், 3) 2 செ.மீ நீளமுள்ள அரிவாள், 4) TVS ஸ்போட் TN50I5514, 5) 43 செ.மீ நீளமுள்ள பிச்சுவா கத்தி மற்றும் 6) 43 செ.மீ நீளமுள்ள அரிவாள் ஆகியவைகளை போலீசார் கைப்பற்றியதாக சொல்லப்படும் நேரத்தில் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் எதுவும் என்னுடைய கையொப்பங்கள் அல்ல.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி</u>

1. கடந்த 25.11.2021 தேதி காலை 5.30 மணியளவில் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்திற்கு நானும், அ.சா-12 அப்துல் பதாக் என்பவரும் இரு சக்கர வாகனம் காணவில்லை என்பது தொடர்பாக புகார் அளிக்க சென்றபோது திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 4 ம் எதிரி பிரேம்குமார், 5 ம் எதிரி கலைசெல்வன், 6 ம் எதிரி சுரேஷ், 7 ம் எதிரி கோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் காவல் நிலையத்தில் இருந்ததாவும், அஹரதிருநல்லூர் காமராஜர் காலணியை சேர்ந்த செல்வமணி மகன் குமரேசன் என்பவர் தொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டபோது எதிரிகள் ஒவ்வொருவரும் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அப்போது நானும் என்னுடன் வருகை தந்திருந்த அ.சா-12 அப்துல் பதாக் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாவும், சொன்னால் சரியல்ல.

2. மேலும் காவல் துறையினர், 4ம் எதிரி பிரேம்குமார் என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதன் அடிப்படையில் சம்பவத்தில் பயன்படுத்திய இரு சக்கர வாகனம் மற்றும் பிச்சுவாக் கத்தி ஆகியவைகளை திருவாரூர் நாகை பைபாஸ் ரோட்டில் அருகாமையில் உள்ள புளியந்தோப்பு முள் புதரில் கைப்பற்றியதாகவும், அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் நானும் சாட்சி அ.சா-12 அப்துல் பதாக் என்பவரும் கையொப்பம் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

3. மேலும் காவல் துறையினர், 5ம் எதிரி கலைச்செல்வன் என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதன் அடிப்படையில் சம்பவத்தில் பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தை கொரடாச்சேரியில் உள்ள ஔவையார் தியேட்டர் அருகே உள்ள கருவை காட்டில் இருசக்க வாகனத்ததையும், பின்னர் கொரடாச்சேரிக்கு அருகாமையில் உள்ள சிமிலி ONGC அருகே உள்ள வாய்கால் அருகில் இருந்து இரும்பு வாள் ஒன்றையும், கைப்பற்றியதாகவும், அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் நானும் சாட்சி அ.சா-12 அப்துல் பதாக் என்பவரும் கையொப்பம் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

4. மேலும் காவல் துறையினர், 6ம் எதிரி சுரேஷ் என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதன் அடிப்படையில் சம்பவத்தில் பயன்படுத்திய அருவாளை திருவாரூர் நாகை பைபாஸ் அருகே உள்ள மதுரா நகர் அருகே உள்ள புளியந்தோப்பில் இருந்த குப்பை மேட்டில் இருந்து இரும்பு அரிவாள் ஒன்றையும், கைப்பற்றியதாகவும், அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் நானும் சாட்சி அ.சா-12 அப்துல் பதாக் என்பவரும் கையொப்பம் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

5. மேலும் காவல் துறையினர், 7ம் எதிரி கோபாலகிருஷ்ணன் என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதன் அடிப்படையில் சம்பவத்தில் பயன்படுத்திய அருவாளை திருவாரூர் நாகை பைபாஸ் அருகே உள்ள மதுரா நகர் அருகே உள்ள புளியந்தோப்பில் இருந்த குப்பை மேட்டில் இருந்து இரும்பு அரிவாள் ஒன்றையும், கைப்பற்றியதாகவும், அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் நானும் சாட்சி அ.சா-12 அப்துல் பதாக் என்பவரும் கையொப்பம்

செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.இந்த வழக்கில் உள்ள எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்றும், அதன் காரணமாக அவர்களை காப்பாற்ற மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யும்போது உடனிருந்த சாட்சி கையொப்பங்கள் செய்ததையும், சான்று பொருட்கள் கைப்பற்றும் போது உடனிருந்து சாட்சி கையொப்பங்கள் செய்ததையும் மறைத்து எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.01.07 17:01:35 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.